செய்திப் பணிப்பாளர்/செய்தி ஆசிரியர் 2017. 07.19

# செய்தி அறிவித்தல்

## குடித்தனத்தின் உணவுப் பாதுகாப்பு தொடர்பான அளவீட்டு அறிக்கை - 2014

**தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்**
**தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகார அமைச்சு**

**தொலைபேசி : 011-2147464** **தொலைமடல் : 011-2147463**

---

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் 2013/14 இன் கீழ் விவசாய நடவடிக்கைகள் தொடர்பான கணக்கெடுப்பிற்குச் சமாந்திரமாக குடித்தனத்தின் உணவுப் பாதுகாப்பு தொடர்பான அளவீடும் மேற்கொள்ளப்பட்டது. தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் முதன் முறையாக இந்த அளவீடு நடாத்தப்பட்டது. முழு நாடும் உள்ளடங்கும் வகையில் அளவீட்டிற்காக 25,000 வீட்டுக் கூறுகள் மாதிரியாகப் பயன்படுத்தப்பட்டது.

செயற்றிறன் மற்றும் ஆரோக்கியமான வாழ்கைக்காக நாட்டின் சகல மக்களும் சகல சந்தர்ப்பங்களிலும் போதுமான அளவு பாதுகாப்பான மற்றும் போஷாக்கான உணவைப் பெற்றுக்கொள்வதற்கு காணப்படும் ஆற்றல் உணவுப் பாதுகாப்பாகக் கருதப்படும். அதற்கமைய இலங்கையின் மொத்தக் குடித்தனங்களுள் உணவுப் பாதுகாப்பினைக் கொண்டிருக்கும் குடித்தனங்களின் வீதாசாரம் 90% அளவு உயர் மட்டத்தில் காணப்பட்டதாக தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி அமர சதரசிங்ஹ அவர்கள் தெரிவித்தார்.

உணவுப் பாதுகாப்பின்மையானது மேலும் பகுப்பாய்வு செய்யப்பட்டு நான்கு பிரிவுகளாக வகைப்படுத்திக் காட்டப்பட்டுள்ளது. அதாவது உணவுப் பாதுகாப்பின்மையை அண்மித்த, ஓரளவு உணவுப் பாதுகாப்பற்ற, நடுத்தர உணவுப் பாதுகாப்பற்ற மற்றும் கடுமையான உணவுப் பாதுகாப்பற்ற என்றவாறாகும். அதற்கமைய இலங்கையின் மொத்தக் குடித்தனங்களுள் உணவுப் பாதுகாப்பின்மையை அண்மித்த குடித்தனங்களின் வீதாசாரம் 0.9% ஆகவும் ஓரளவு உணவுப் பாதுகாப்பின்மையைக் கொண்ட குடித்தனங்களின் வீதாசாரம் 2.2% ஆகவும் நடுத்தர உணவுப் பாதுகாப்பின்மையைக் கொண்ட குடித்தனங்களின் வீதாசாரம் 4.1% ஆகவும் மற்றும் கடுமையான உணவுப் பாதுகாப்பின்மையைக் கொண்ட குடித்தனங்களின் வீதாசாரம் 3.1% ஆகவும் காணப்படுகின்றது.

ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் (USAID), உணவு மற்றும் போஷணை தொடர்பான தொழில்நுட்ப ஒத்துழைப்பை வழங்கும் வேலைத்திட்டம் (FANTA) என்பவற்றினால் அடையாளப்படுத்தப்பட்டுள்ள உணவுப் பாதுகாப்பின்மையை எதிர்நோக்கும் குடித்தனங்களின் அந்த அனுபவத்தை பெறுமான ரீதியாக அளவிட்டுக் காட்டக்கூடிய முறைமையாக குடித்தன உணவுப் பாதுகாப்பின்மை நுழைவுச் சுட்டெண் (Household Food Insecurity Access Scale – HFIAS) ஐக் குறிப்பிடலாம். இந்த HFIAS பெறுமதி 0 இற்கும் 24 இற்கும் இடையில் காணப்படும். இங்கு பெறுமதி 0 என்பது குறைந்த உணவுப் பாதுகாப்பின்மையும் பெறுமதி 24 என்பது மிகவும் கடுமையான உணவுப் பாதுகாப்பின்மையும் நிலவுகின்றது என்பதாகும். இலங்கையில் உணவுப் பாதுகாப்பின்மையை எதிர்நோக்கும் குடித்தனங்களுக்கான HFIAS பெறுமதி 9.20 ஆகும்.

மேலும் மொத்தக் குடித்தனங்களுள் அவர்கள் முகங்கொடுத்த அனுபவங்களுக்கமைய குறைந்த தரத்திலான உணவினை நுகரும் குடித்தனங்களின் வீதாசாரம் 3% ஆகவும் அளவிலும் குறைந்த உணவு வேளையொன்றை நுகரும் குடித்தனங்களின் வீதாசாரம் 3.7% அளவீட்டுத் தரவுகளிலிருந்து தெரியவந்துள்ளது.

அளவீட்டின் சகல தகவல்களும் அடங்கிய வெளியீடு தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் இணையத்தளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. WWW.statistics.gov.lk அத்தோடு இந்த மதிப்பீடு தொடர்ச்சியாக நடாத்தப்படுவதற்கு திணைக்களத்தினால் திட்டமிடப்பட்டுள்ளது.

கலாநிதி. ஏ.ஜே. சதரசிங்க
பணிப்பாளர் நாயகம்
தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
தொலைபேசி இலக்கம்: 011 - 2147020